# St. John Nepomucene
## May 16



# புனித நெப்போமுசேன் அருளப்பர் (1330-1383)

இவருடைய பெற்றோர் நெடுநாள் செபித்ததன் பயனாக பிறந்தவர். குழந்தை பிறந்ததும் தேவதாய்க்கு அர்ப்பணம் செய்தார்கள். சிறந்த கல்விப் பயிற்சி இவருக்குக் கிடைத்தது. இளமையில் இருந்தே இவர் குருத்துவத்தை நாடினார். குருப்பட்டம் பெற்றதும் மக்களுக்கு போதிக்கும் வேலையை இவரிடம் ஒப்படைத்தார்கள். இவரது உழைப்பால் நன்மைகள் ஏராளமாக விளைந்தன. இவரது பிரசங்கத்தைக் கேட்க நகரத்தின் மக்கள் அனைவரும் ஆவலோடு விரைந்து செல்வார்கள். அப்போது நாட்டை ஆண்டு வந்தவன் 4-ஆம் வென்செஸ்லாஸ் மன்னன். இவன் கொடுர மனம் படைத்த கெட்டவன் தன் மனைவி பாவசங்கீர்த்தனத்தில் வெளியிட்ட பாவங்களை தன்னிடம் சொல்லும்படி அவர் குருவை நச்சரித்துக்கொண்டிருப்பான். அவர் மறுத்தமையால் சிறையில் வைத்து அவரை வதைத்தான். பின்னர் அவரது கை கால்களைக் கட்டி அவரை ஆற்றில் எறிந்தான். 300 ஆண்டுகளுக்குப் பின்னும் அவரது நாக்கு அழியாமல் இருந்தது. பாவசங்கீர்த்தனம் கேட்கும் குருக்களுக்கு இவர் பரலோக பாதுகாவலர்.

**சிந்தனை:**

பாவசங்கீர்த்தனம் ஓர் உடைபாட முத்திரை. நமது பாவங்களை குரு ஒருபோதும் வெளியிடமாட்டார். எனவே நமது அந்தரங்க பாவங்களை உண்மையாக மனஸ்தாபத்துடன் குருவிடம் சொல்வோம்.

**செபம்:**

பாவசங்கீர்த்தனம் கேட்கும் குருக்களுக்கு பரிசுத்தாவியே உமது ஒளியை நிரம்பக் கொடுத்தருளும்.